


# தற்காலக் கவிதைகள் – 1



## அ. வேலி





நட்சத்திரப் பூக்களை
எண்ண முடியாமல்
மேலே கவிழ்ந்தபடி கூரை
ஒட்டடைகள் படிந்து
கறுப்பாய் போனது.
கம்பி போட்ட சாளரம் கூட
உயரமாய்.
ஆனாலும் திறந்தபடி
அதனூடே காற்று.
எப்பொழுதும்
மிகவும் இரகசியமாய்
உன்னிடம் என்னை
அழைக்கிற காற்று
என்னைச் சூழவும் சுவர்கள் தான்
நச்...நச்... என்று
ஓயாமல் கத்திக் கொண்டிருக்கிற
பல்லிகள் ஊர்கிற சுவர்கள்
அவையும்
ஒட்டடைகள் படிந்து
எப்போதோ கறுத்துப் போனவை.
உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்
பழைய பஞ்சாங்கங்களில்
புதிதாக
நம்பிக்கை தருவதாய்
ஒரு சொல்லைத் தேடிப்பார்த்தபடி,
எப்பொழுதுதான் என்னால்
நீ வசிக்கின்ற அந்த
திறந்த வெளிக்கு வரமுடியும்?



உன் இருப்பிடம்
இங்கிருந்து வெகு தொலைவோ?
இரண்டு சிட்டுக்குருவிகளை
இங்கே அனுப்பேன்!
அல்லது
இரண்டு வண்ணத்துப் பூச்சிகளையாவது....

ஊர்வசி
- 'சொல்லாத சேதிகள்' -



அருஞ்சொற்கள்

சாளரம் - யன்னல், பலகணி

பயிற்சி

1. 'நட்சத்திரப் பூக்களை எண்ண முடியாமல் மேலே கவிழ்ந்தபடி கூரை ஒட்டடைகள் படிந்து கறுப்பாய் போனது' இவ்வரிகளில் கவிஞரின் கற்பனையாற்றல் எவ்வாறு வெளிப்படுகிறது ?

2 .'என்னைச் சூழவும் சுவர்கள் தான்' சுவர்கள் என்பது எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளது ?

# ஆ. வன்மப்படுதல்

சுற்றி வளைத்து
வேலிகட்டி
அதற்குள் என்னைச்
சுவாசிக்க சொல்வது தான்
நீ காட்டும் சுதந்திரம்

விரிந்தெழுகிற
என் தேடல்களைப் பரிசோதிக்க
உன் கையில் அதிகாரம்
அதனால் தான்
நினைத்தபடி
நீ சத்திர சிகிச்சை செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட பிராணியாகிவிட்டது



சுயத்தையெல்லாம்
ஒப்படைத்து விட்டு
வைக்கோல் பொம்மையாகி
உன் இழுப்புக்கு
ஆட வேண்டுமென்றே
நீ நினைக்கிறாய்

நீ சொல்வது தான் வேதம்
நீ காட்டுவது தான் உலகமெனில்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு?
முன்னேற்பாட்டுடன் நடத்தும்

தாக்குதலைப் போன்று
திடீர் திடீரென என்னைச்
சுற்றி வளைக்கிறாய்
(எதிலும் முன்னேற விடாமல்)

நீ வஞ்சித்தவர்களை
மறந்து துரோகி என்கிறாய்
நீ குற்றவாளியாக இருந்து கொண்டு
என்னைத் தண்டிக்கிறாய்



நீ ஏவிய சூறாவளி
வெற்றிகரமாய் வீசி வீசி
என் தேசத்தையே
நாசப்படுத்தலாம்

உலகில்
ஒரே காலநிலை
ஒரே அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை என்பதை
நீ மறந்து விட்டாய்

-அனார் -

'ஓவியம் வரையாத தூரிகை'

### பயிற்சி

1. 'நீ' என்று சுட்டப்படுவது யாரை?
2. அவரின் நடத்தைகள் பற்றிக் கவிஞர் என்ன கூறுகின்றார்.
   நீ குற்றவாளியாக இருந்து கொண்டு
   என்னைத் தண்டிக்கின்றாய்'
   என்ற வரிகளில் வெளிப்படும் உணர்வு என்ன?
3. சுதந்திர உணர்வு இக்கவிதையில் எவ்வாறு இழையோடுகின்றது?
4. இக்கவிதையை வாசிப்பதால் நீர்பெறும் உணர்வைப் பதிவுசெய்க.

# இ. பிரகடனம்

அம்மா,
யன்னலைத் திறப்பமா?
வேர்த்துக் கொட்டுது!

இல்லைப் பிள்ளை.
இந்தா விசிறி,
பேசாமப் படு!

அம்மா!
மூச்சு முட்டுது
கழுத்தை யாரோ நெரிக்கிற மாதிரி
கதவைத் திறப்பமா?
புதுக் காத்து உள்ள வரும்.



இல்லைப் பிள்ளை,
எனக்குத் தெரிஞ்ச வரை
எங்கம்மாவுக்குத் தெரிஞ்சவரை
அதற்கும் முந்தி ...
எத்தனையோ தலைமுறையா
இந்தக் கதவோ யன்னலோ
திறந்தது கிடையாது.

இப்ப திறந்தா
எங்கட பரம்பரைக் கௌரவம்
என்னாகும்..?
பேசாமப் படு!

ஐயோ!
நான் மூச்சுத் திணறிச்
சாகப்போறன்.
இந்தக் கௌரவங்கள்
என்ர சாவைத் தடுக்குமே?
வெளியால எவ்வளவு
காத்து வீசுது!
தவழ்ந்து... தடவி...
மெல்ல அணைத்து...
சீறிச் சுழன்று..

பூட்டி வைத்துப்
புளித்து நாறும்
இந்த அறையில கிடந்து
புழுங்கிச் சாக
என்னால ஏலாது.

இந்த நாலு சுவரையும்
கிடுகு வேலியையும் தாண்டி
நான் வாழப்போறன்.
சுவர்கள் இல்லாத பரந்த வெளியில
காத்தோட கைகோர்த்துச்
சுதந்திரமாய் உலாவி...
நான் வாழவேண்டும்!

-மைத்ரேயி-
'துருவச்சுவடுகள்'

## பயிற்சி

1. தாயின் மனோபாவம் எத்தகையது?
2. மகளின் எதிர்பார்ப்பு என்ன?
3. " இந்த நாலு சுவரையும்
   கிடுகு வேலியையும் தாண்டி
   நான் வாழப் போறன்..."
   இந்த வரிகள் வெளிப்படுத்தும் உணர்வினை விளக்குங்கள்.
4. தலைப்பு வெளிப்படுத்தும் மையக்கருத்து யாது?
5. தாய்க்கும் மகளுக்குமான உணர்வுப்பரிமாற்றத்தை உரையாடல் வடிவில் எழுதுக.

# ஈ. சிரிக்கக் கற்றுக் கொடு, மகனேயூ

முன்னொருகாலத்தில்
மகனே,
அவர்கள் இதயத்தோடு சிரிப்பார்கள்
கண்களால் சிரிப்பார்கள்
ஆனால், இப்போது
பற்களால் மட்டுமே சிரிக்கிறார்கள்.

அவர்களது பனிக்கட்டி மூடிய
சில்லிட்ட கண்கள்
என் நிழல்களுக்குப் பின்னாலும்
துழாவுகின்றன,
அவர்கள் தங்கள் இதயங்களோடு
கை குலுக்கிய காலங்கள்
இருக்கத்தான் செய்தன.

என் மகனே, குழந்தாய்
இப்போது அவர்களின் வலது கை
இதயமில்லாமல் குலுக்குகிறபோது
இடது கை
என் காலி சட்டைப்பைகளை
துழாவுகின்றன.

''உங்கள் வீடாக நினைத்துக் கொள்ளுங்கள்''
''மீண்டும் வருக''
என்று சொல்கிறார்கள்.
ஆனால்,
நான் மீண்டும் வந்து
தன் வீடாக நினைக்கிறபோது
ஒருமுறை, இருமுறை
மூன்றாவது முறை இருக்கப்போவதில்லை
ஏனெனில்,
கதவுகள் எனக்காக மூடிக்கொள்கின்றன.
நான் பலவற்றைக் கற்றுக் கொண்டேன்,
மகனே, நான் பல முகங்களை
அணியக் கற்றுக் கொண்டேன்.



அடிக்கடி மாற்றும் உடைகளைப்போல -
வீட்டுமுகம், அலுவலக முகம்,
நடுத்தெரு முகம், விருந்து முகம்
மது அருந்தும் முகம் என்று -
படங்களில் நிலையாக இருக்கும்
சிரிப்புக்களைப் போல,
உறுதி அளிக்கும் சிரிப்புகள்.

என்னை நம்பு மகனே,
நான்
உன்னைப்போல இருந்தபோது
எப்படி இருந்தேனோ
அப்படியே இருக்க விரும்புகிறேன்.

இந்த ஊமைச் செய்திகள் அனைத்தையும்
மறக்க விரும்புகிறேன்.

சிரிப்பது எப்படி என்று
மீண்டும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்.
ஏனெனில்,
நான் கண்ணாடியில் சிரிக்கிறபோது
என் பற்கள்
பாம்பின் நச்சுப்பற்கள் போல்
தெரிகின்றன.



மகனே, குழந்தாய்!
எப்படி சிரிப்பது என்று
எனக்குக் காட்டு

ஒரு காலத்தில்
நான் உன்னைப்போல் இருந்தபோது
எப்படி சிரித்தேன் என்று
எனக்குக் காட்டு, மகனே!

-கேபிரியல் ஓகாரா-

தமிழில் - இந்திரன்

'அறைக்குள்வந்த ஆபிரிக்கவானம்'

## பயிற்சி

1. முற்காலத்துக்கும் இக்காலத்துக்கும் இடையில் கவிஞர் காணும் வேறுபாடுகள் எவை?
2. கவிதையில் உணர்த்தப்படும் 'அவர்கள்' யாராக இருக்கலாம்? 'நான்' யாராக இருக்கலாம்?
3. 'முகங்களை அணியக்கற்றுக் கொண்டேன்' என்ற வரிகளின் தொனிப் பொருள் என்ன?

## செயற்பாடு

1. தற்காலச் சமூகப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கவிதைகளைச் சேகரித்து கவிதை நூலொன்றை ஆக்குங்கள்.

ஆக்கத்திறன்

## சுவரொட்டி

சுவர்களில் ஒட்டப்படுவதால் இது சுவரொட்டி எனப்படும். இது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே ஒட்டப்படுகின்றது. துண்டுப்பிரசுரம் போலவே இதுவும் மக்களுக்குத் தகவல்களைத் தெரிவிப்பதற்காக வெளியிடப்படுகின்றது. ஆனால் யாரும் இதை மக்களுக்கு விநியோகிப்பதில்லை; வாசிக்கும்படி கூறுவதுமில்லை.

சுவரொட்டியின் மையக் கவர்ச்சியால் மக்கள் தாமாகவே அவற்றை வாசிக்கின்றனர். சுவரொட்டியில் பரப்பப்படும் செய்திகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துவன. பொதுசன அபிப்பிராயங்களை மாற்றும் சக்தி அவற்றிற்கு உண்டு. பல சந்தர்ப்பங்களில் சுவரொட்டிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். இவை பலதுறைகளைத் தழுவி வெளியிடப்படுகின்றன.

1. பொதுத்துறை சார்ந்தவை (சுகாதாரம் / குடும்பநலம் )
2. அரசியல் சார்ந்தவை.
3. விளம்பரங்கள் சார்ந்தவை.

சுவரொட்டியின் பொது இலட்சணங்கள்

1. பெரிய எழுத்தில் அமைதல்.
2. கருத்தாழம்மிக்க சிறிய வசனத்தினாலான சொற்றொடர்கள், கூற்றுக்களைக் கொண்டிருத்தல்.
3. மக்களைக் கவரும் தன்மை, கவனத்தை ஈர்க்கும் வாக்கிய அமைவு, விழிப்பு என்பனவற்றைக் கொண்டிருத்தல்.
4. வெவ்வேறு நிறங்களையும் எழுத்தமைவுகளையும் கையாண்டு வெளியிடப்படுகின்றமை. வித்தியாசமான பாணியிலான கருத்துப்படங்கள் சித்திரிக்கப்படுகின்றமை.

**மாதிரி சுவரொட்டி**



**வியர்வையால் ஒன்றுபடுவோம் !**

**தொழிலாளர்களே இந்நாட்டின் முதுகெலும்பு!**
**மே 1 உலகத் தொழிலாளர் தினம்**
**தொழிலாளர்களின் வியர்வைத்துளிகள்**
**ஒன்று சேரும் பேரணி**

**மேதினத்தன்று எமது உரிமைகளுக்காக, கைகோர்த்துக் குரல் கொடுப்போம்.**

**இடம் : விகாரமகாதேவி பூங்கா** **காலம் : காலை 9 மணி**

**அனைவரும் அணி திரள்க!**

**தேசிய தொழிலாளர் பேரவை,**
**கொழும்பு.**

### பயிற்சி

1. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு உங்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தில் ''பெண்கள்'' விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்குக் குறித்த தினத்தில், குறித்த இடத்தில் அனைவரையும் ஒன்று கூடும்படி ஒரு சுவரொட்டி தயாரியுங்கள்.

# எதிர்ப்பொருட்சொற்கள்

சில சொற்களின் எதிர்ப்பொருட்சொற்கள் வாக்கியங்களில் அமைக்கப் பட்டிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| பகிரங்கம் | - | நாம் செய்யும் **அந்தரங்கமான** பாவங்களையும் ஆண்டவன் காண்கிறான். |
| இம்சை | - | **அகிம்சை** வீரத்தனத்தின் சிகரமேயன்றிக் கோழைத்தனமன்று. |
| உலோபி | - | முல்லைக்குத் தேரீந்தான் **வள்ளல்** பாரி. |
| பண்டிதர் | - | பாரதியின் பாடல்களைப் **பாமரரும்** படித்தின்புறுகின்றனர். |
| வாழ்வு | - | செல்வத்தால் வந்த வாழ்வும், வறுமையால் வந்த **தாழ்வும்** என்றும் நிலைக்காது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆலம் | - | அமுதம் | காய்தல் | - | உவத்தல் |
| திண்மை | - | நொய்ம்மை | சீதளம் | - | வெப்பம் |
| தொகை | - | விரி | கிரமம் | - | அக்கிரமம் |
| நுண்மை | - | பருமை | ஞானம் | - | அஞ்ஞானம் |
| மருள் | - | தெருள் | பூரணம் | - | அபூரணம் |
| மானம் | - | அவமானம் | அந்தம் | - | அநந்தம் |
| அட்சம் | - | நிரட்சம் | அட்சரம் | - | நிரட்சரம் |
| அஞ்சனம் | - | நிரஞ்சனம் | ஆதி | - | அநாதி / அந்தம் |
| இச்சை | - | அநிச்சை | உத்தமன் | - | அநுத்தமன் |
| ஆதாரம் | - | நிராதாரம் | ஆதரவு | - | அநாதரவு |
| கதி | - | நிர்க்கதி | தருக்கம் | - | குதருக்கம் |

## பயிற்சி

ஆசிரியரால் வழங்கப்படும் எதிர்பொருட் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமையுங்கள்.

## செயற்பாடு

தரம் 9 - 10 வரையிலுள்ள தமிழ்ப் பாடநூல்களைத் துணையாக கொண்டு இவை போன்ற எதிர்பொருட் சொற்களின் பட்டியல் ஒன்று தயாரியுங்கள். அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்

# ஆக்கப்பெயர்கள்

கீழே உள்ள சொற்களை அவதானிப்போம்.

| தொகுதி - 1 | தொகுதி - 11 |
|---|---|
| அறிவு | அறிவாளி |
| மொழி | மொழியியல் |
| சொந்தம் | சொந்தக்காரி |
| எழுத்து | எழுத்தாளன் |
| படி | படிப்பு |
| உடு | உடுப்பு |
| பயில் | பயிற்சி |
| நீள் | நீளம் |

தொகுதி 1 இல் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் காணப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பெயர்ச் சொற்கள் தொகுதி 11 இல் உள்ளன.

இவ்வாறு பெயர் அல்லது வினைச்சொற்கூறுகளுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் 'ஆக்கப்பெயர்கள்' எனப்படும்.

நாம் நாளாந்தம் இவ்வாறான ஆக்கப்பெயர்களைப் பயன்படுத்துகிறோமல்லவா ?

இவை எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதனை விரிவாக விளங்கிக் கொள்வோம்.

பெயர்ச்சொற்களுடனோ, வினைச்சொற்களுடனோ வேறு அடிச்சொற்களுடனோ விகுதிகள் சேர்வதன் மூலம் ஆக்கப்பெயர் உருவாகின்றது. சொற்களுடன் சேரும் விகுதிகள் 'ஆக்கப்பெயர்விகுதிகள்' எனப்படும்.

இனி, பெயர்ச்சொற்களுடன் ஆக்கப்பெயர்விகுதிகள் சேர்ந்து உருவாகும் ஆக்கப் பெயர்களை அவதானிப்போம்.

பெயர் + விகுதி = ஆக்கப்பெயர்

இங்கு பெயர்ச்சொல்லுடன் ஆளி, சாலி, இயல், தனம், துவம், இயம், ஆளன், காரன், காரி ஆகிய விகுதிகள் சேர்ந்து உருவாகும் ஆக்கப்பெயர்களை அவதானிப்போம்.

பெயர் + விகுதி = ஆக்கப்பெயர்

1. கொடை + ஆளி = கொடையாளி
2. புத்தி + சாலி = புத்திசாலி
3. அறிவு + இயல் = அறிவியல்
4. மூலம் + தனம் = மூலதனம்
5. மருந்து + துவம் = மருத்துவம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | பெண் | + | இயம் | = | பெண்ணியம் |
| 7. | ஆய்வு | + | ஆளன் | = | ஆய்வாளன் |
| 8. | வித்தை | + | காரன் | = | வித்தைக்காரன் |
| 9. | வடை | + | காரி | = | வடைக்காரி |

சில ஆக்கப் பெயர்களை மேலும் சில ஆக்கப் பெயர்களாகவும் உருவாக்கலாம்.

முதலாளித்துவம், புத்திசாலித்தனம்,
கெட்டிக்காரத்தனம் உளவியல்வாதம்,

மேலுள்ள ஆக்கப் பெயர்கள் எவ்வாறு உருவாகின என நோக்குவோம்.

| பெயர் | + | விகுதி | + | விகுதி | = | ஆக்கப் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| முதல் | + | ஆளி | + | துவம் | = | முதலாளித்துவம் |
| புத்தி | + | சாலி | + | தனம் | = | புத்திசாலித்தனம் |
| கெட்டி | + | காரன் | + | தனம் | = | கெட்டிக்காரத்தனம் |
| உளம் | + | இயல் | + | வாதம் | = | உளவியல்வாதம் |

இனி வினைச் சொற்களுடன் சி, ஐ, வு, மை, கை, வி, ச்சி, ப்பு, க்கை, அம், மதி, அல், ச்சல் ஆக்கப் பெயர் விகுதிகள் சேர்த்து உருவாகும் ஆக்கப் பெயர்களை அவதானிப்போம்.

| 1. | வினை | + | விகுதி | = | ஆக்கப் பெயர் |
|---|---|---|---|---|---|
| | முயல் | + | சி | = | முயற்சி |
| | கொடு | + | ஐ | = | கொடை |
| | அழி | + | வு | = | அழிவு |
| | எழு | + | கை | = | எழுகை |
| | தீர் | + | வை | = | தீர்வை |
| | கல் | + | வி | = | கல்வி |
| | உயர் | + | ச்சி | = | உயர்ச்சி |
| | படி | + | ப்பு | = | படிப்பு |
| | படு | + | க்கை | = | படுக்கை |
| | உயர் | + | அம் | = | உயரம் |
| | பெறு | + | மதி | = | பெறுமதி |
| | பாடு | + | அல் | = | பாடல் |
| | அலை | + | ச்சல் | = | அலைச்சல் |

வினையை அடிப்படையாகக் கொண்ட ஆக்கப்பெயர்களுடன் ஆக்கப்பெயர் விகுதிகள் சேர்த்து மேலும் ஆக்கப்பெயர்களாகவும் உருவாக்கலாம்.

முயற்சியாளன் படைப்பாளி அடிமைத்தனம்
சிறுமைத்துவம் பார்வையாளன்

மேலுள்ள ஆக்கப் பெயர்கள் எவ்வாறு உருவாகின என அவதானிப்போம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முயல் | + | சி | + | ஆளன் | = | முயற்சியாளன் |
| படைப்பு | + | ப்பு | + | ஆளி | = | படைப்பாளி |
| அடிமை | + | மை | + | தனம் | = | அடிமைத்தனம் |
| பார்வை | + | வை | + | ஆளன் | = | பார்வையாளன் |

இவ்வாறு வினையடிகளுடன் ஆக்கப்பெயர் விகுதிகளைச் சேர்த்தால் அதிகளவில் ஆக்கப்பெயர்களை உருவாக்கலாம்.

வினையடியாகப் பிறக்கும் ஆக்கப்பெயர்களும் பெயர்ச்சொற்களின் பண்பையே கொண்டிருக்கும்.

### பயிற்சி

1. பெயர் + விகுதி சேர்ந்து உருவாகக்கூடிய ஆக்கப்பெயர்கள் பத்து எழுதுங்கள்.
2. வினை + விகுதி சேர்ந்து உருவாகக்கூடிய ஆக்கப்பெயர்கள் பத்து எழுதுங்கள்.

### செயற்பாடு

1. ஒரு பெயர் + பல விகுதிகள் சேர்ந்து உருவாகும் ஆக்கப்பெயர்கள்,

   ஒரு வினை + பல விகுதிகள் சேர்ந்து உருவாகும் ஆக்கப்பெயர்கள் ஆகியவற்றை குழுவாக இணைந்து எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

2. 'தற்காலக் கவிதைகள்' எனும் பாடப்பரப்பிலுள்ள ஆக்கப்பெயர்களை இனங்கண்டு எழுதுங்கள்.